# 26

# பிக்ஹூத்துறை இமாம்களைத் தெரிந்துகொள்வோம்

ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இஸ்லாம் வேகமாகப் பரவியது. பல மொழிகளையும் கலாசாரங்களையும் சார்ந்த அறபியல்லாத பலர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். இதனால் மார்க்கம் தொடர்பான புதிய பிரச்சினைகள் தோன்றின. அவற்றுக்கு இஸ்லாமியத் தீர்வை வழங்க வேண்டிய பொறுப்பு அன்றைய அறிஞர்களைச் சார்ந்திருந்தது. அவர்கள் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில் நுணுக்கமாக ஆராய்ந்து தீர்ப்புக்களை முன்வைத்தார்கள். இவ்வாறு அல்குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும் அறிஞர்கள் **முஜ்தஹித்கள்** எனப்பட்டார்கள். இவர்கள் ஈடுபட்ட துறையை **பிக்ஹு**த்துறை என வழங்குவார்கள்.

இத்தகு அறிஞர்கள், தம்மிடம் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு, தமக்குக் கிடைத்த அல் - குர்ஆன், அல் - ஹதீஸ் ஆதாரங்களை வைத்துத் தீர்ப்பு வழங்கினார்கள். ஏற்கனவே அவர்கள் அல் - குர்ஆன், அல் - ஹதீஸ் போதனைகளை நடத்தி வந்தமையால் சட்டப் பிரச்சினைகளையும் மக்கள் அவர்களிடமே முன்வைத்தனர். இவ்வாறு பாட போதனைகளை நடத்தியும், பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியும் பங்களிப்புச் செய்தவர்களில் சிலர் குறிப்பிடத்தக்கோராகத் திகழ்ந்தனர். அவர்களுள் இமாம்களான அபூஹனீபா (ரஹ்), மாலிக் (ரஹ்), ஷாபிஈ (ரஹ்), அஹ்மதிப்னு ஹன்பலி (ரஹ்) ஆகிய நால்வரும் குறிப்பான இடத்தைப் பெற்றுப் பிரகாசிக்கிறார்கள். பிற்காலத்தில் இவர்களது கருத்துக்களும் தீர்ப்புக்களும் மத்ஹப் எனும் பெயரில் வளர்ச்சியடைந்தன.

**இமாம்கள் பற்றிய குறிப்புகள்**

| இமாம் | இயற் பெயர் | தந்தை பெயர் | பிறப்பு | இறப்பு | சிறப்புப் பெயர் |
|---|---|---|---|---|---|
| அபூஹனீபா (ரஹ்) | நு.்.மான் | ஸாபித் | ஹி. 80 கூபா | ஹி.150 கூபா | அல்-இமாமுல் அ.்.ழம் |
| மாலிக் (ரஹ்) | மாலிக் | அனஸ் | ஹி.94 மதீனா | ஹி.179 மதீனா | இமாமுல் மதீனா |
| ஷாபிஈ (ரஹ்) | முஹம்மத் | இத்ரீஸ் | ஹி.150 காஸா | ஹி.204 எகிப்து | ஆலிமுல் குறைஷ் |
| அஹ்மதிப்னு ஹன்பலி(ரஹ்) | அஹ்மத் | முஹம்மத் | ஹி. 164 பக்தாத் | ஹி.241 பக்தாத் | ..... |

## இமாம் அபூ ஹனீபா (ரஹ்)

இமாமவர்கள் சிறுவயதிலேயே அறிவும் ஆற்றலும் உடையவராகத் திகழ்ந்தார்கள். எனினும், தொடர்ந்து படிக்காமல் தந்தையின் வியாபாரத்தில் ஈடுபட்டார். அவரது திறமையை அவதானித்த இமாம் ஷஅபி (ரஹ்) அவர்கள் தொடர்ந்து படிக்குமாறு அவரைத் தூண்டினார். தொடர்ந்து படித்த அவர் பிற்காலத்தில் சிறந்த அறிஞராகப் பாராட்டப்பட்டார்.

கூபாவில் ஹம்மாத் இப்னு ஸுலைம் (ரஹ்) என்ற அறிஞரிடம் கற்றார். அவரது திறமையைக் கண்ட ஆசிரியர் தமது கலாபீடத்தில் இவரை உதவியாளராக அமர்த்திக் கொண்டார். பல வருடங்கள் ஆசிரியருடன் சேர்ந்து பிக்ஹுத் துறையில் நிபுணத்துவம் பெற்றார். ஆசிரியர் மரணித்தபோது அவரது இடத்துக்கு இமாம் அபூஹனீபா அவர்களே நியமிக்கப்பட்டார்கள்.

இவரிடம் தர்க்க ரீதியாகக் கருத்துக்களை முன்வைக்கும் திறமை காணப்பட்டது. அது பிக்ஹுப் பிரச்சினைகளை தெரிந்து கொள்வதற்கும் அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்கும் பேருதவியாக அமைந்தது. பிக்ஹுப் பிரச்சினைகள் அதிகரித்திருந்த அக்காலத்தில் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் கூபாவி லிருந்த அறிஞர்களை ஒன்று கூட்டினார்கள். கூபா ஜாமிஉ மஸ்ஜிதில் ஒன்று கூடிய அறிஞர்களுடன் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினார்கள். கூட்டு முயற்சியாக சட்டத் தீர்ப்புக்களைக் கண்டறிந்தார்கள். அவற்றை எழுத்தில் தொகுத்தார்கள். அது ‘பிக்ஹுல் அக்பர்’ எனும் பெயரில், முதலாவது எழுத்து வடிவிலான பிக்ஹுத் தொகுப்பாக வெளியாகியது.

இது தவிர, அல் ஆலிம் வல் முதஅல்லிம், முஸ்னத் முதலிய நூல்களையும் அவர் தொகுத்தளித்துள்ளார். பிற்காலத்தில் இவர்களது சட்டத் தீர்ப்புகளை

அடிப்படையாகக் கொண்டே அவர்களின் மாணவர்களான இமாம் அபூ யூசுப்(ரஹ்), இமாம் ஸுபர(ரஹ்), முஹம்மத் ஹஸன் ஷைபானி (ரஹ்) முதலானோர் ஹனபி மத்ஹபை உருவாக்கினர்.

## இமாம் மாலிக் (ரஹ்)

இமாமவர்கள் ஸஹாபாக்களையும், தாபிஈன்களையும் சந்தித்தவர் என்பதால் அவர்கள் மூலமும் ஷரீஆ சட்டங்களை விளங்கிக் கொண்டார்கள். மதீனாவில் வாழ்ந்த அறிஞர்களிடமும் கற்றுக் கொண்டார்கள். இதனால் சிறந்த ஹதீஸ் கலை அறிஞராகவும், பிக்ஹுத் துறை அறிஞராகவும் திகழ்ந்தார்கள்.

மதீனாவில் வாழ்ந்தமையால் அவர்களுக்கு அனேக ஹதீஸ்கள் கிடைத்தன. அவற்றைக் கற்று மனனமிட்டதோடு மஸ்ஜிதுன் நபவியில் ஹதீஸ் வகுப்பொன்றையும் நடத்தி வந்தார்கள். அவரது வகுப்பு அமைதியாகவும், பக்திபூர்வமாகவும் அமைந்திருந்தது. ஆசிரியரும், மாணவர்களும் வுழூச் செய்து, மணம் பூசி வகுப்பில் அமர்ந்தனர். மாணவர்கள் மட்டுமன்றி பொதுமக்களும், கலீபாக்களும் கூட அவரது வகுப்பில் கலந்து கொண்டனர். நபி ஸ அவர்களின் ஹதீஸ்களுக்கு அவர் மிகுந்த கண்ணியமளித்தார்.

இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் ஈராக்கில் செய்த பணியை இவர் ஹிஜாஸில் செய்து வந்தார். பிக்ஹு தொடர்பான பிரச்சினைகளுக்கு ஹதீஸ் ஆதாரங்களை வைத்துத் தீர்ப்பு வழங்கினார். தம்மிடம் முன்வைக்கப்படும் மஸ்அலா (கேள்வி)க்களுக்கு அவர் உடனே பதிலளிக்க மாட்டார். தம்மை விடச் சிறந்த அறிஞர்களிடம் சென்று தீர்ப்புப் பெறுமாறு அனுப்பி விடுவார். தமக்குத் தெரியவில்லையாயின் வெட்கப்படாமல் அதனைக் கூறிவிடுவார். அத்துணை பக்தியும், பணிவும் அவர்களிடம் காணப்பட்டன.

சமகாலத்தில் ஹதீஸ், பிக்ஹு தொடர்பான கல்வி மக்களுக்கு அவசியமாக இருந்தது. ஆதலால் பிக்ஹு சட்டங்களையும் ஹதீஸ்களையும் உள்ளடக்கிய 'முவத்தா' என்ற நூலைத் தொகுத்தளித்தார். இது தவிர வேறு பல நூல்களும் அவரால் எழுதப்பட்டன. அவர் வழங்கிய சட்டத் தீர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டே மாலிகி மத்ஹப் உருவானது.

## இமாம் ஷாபிஈ (ரஹ்)

குறைஷிக் குலத்தைச் சார்ந்த இமாமவர்கள் பலஸ்தீனில் பிறந்தார்கள். சிறு வயதில் தந்தையை இழந்தார்கள். தாயுடன் மக்கா சென்று மாமனுடன் வாழ்ந்தார்கள். ஏழு வயதில் குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து கொண்டார்கள்.

கல்வி கற்பதில் ஆர்வம் கொண்ட அவர், கற்பதற்கான வாய்ப்புக்கள் எங்கெல்லாம் காணப்பட்டனவோ அங்கெல்லாம் சென்றார். மக்கா, மதீனா, பக்தாத், எகிப்து என அவரது கல்விப் பயணம் அமைந்தது. மக்காவில் முஸ்லிம் பின் காலித் (ரஹ்), மதீனாவில் இமாம் மாலிக் (ரஹ்), பக்தாதில் இமாம் அபூ யூசுப் (ரஹ்) ஆகியோரிடமும் வேறு பலரிடமும் கற்றுக்கொண்டார். இதனால் பல்வேறு துறைகளில் அவர் நிபுணத்துவம் பெற்றவராகக் காணப்பட்டார்.

இரவு நேரத்தை மூன்றாகப் வகுத்து ஒரு பகுதியை அறிவாராய்ச்சிக்கும், மறுபகுதியைத் தூக்கத்துக்கும் மூன்றாம் பகுதியை இறை வணக்கத்திற்கும் செலவிட்டார். பாட போதனை நடத்திய அதேவேளை, இவர் பல நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் கிதாபுல் உம்மு, அர்-ரிஸாலதுல் உஸூலிய்யா, முஸ்னத் என்பன பிரசித்தமானவை. இஸ்லாமிய சட்ட திட்டங்களை (பிக்ஹ் ) ஆய்ந்தெடுப்பது தொடர்பான உஸூலுல் பிக்ஹ் எனும் துறைக்கு முதன் முதல் உருக்கொடுத்தவராக இவர் பாராட்டப்படுகின்றார். இமாமவர்களது சட்டத் தீர்ப்புகளை வைத்தே ஷாபிஈ மத்ஹப் உருவானது. இலங்கை முஸ்லிம்களுள் மிகப் பெரும்பான்மையினர் இவரது மத்ஹபின் ஒழுங்கிலேயே தமது மார்க்க விவகாரங்களைச் செய்து வருகிறார்கள்.

## இமாம் அஹ்மதிப்னு ஹன்பலி (ரஹ்)

அன்று முஸ்லிம் கிலாபத்தின் தலைநகராக பக்தாத் இருந்தது. அங்கு பிறந்த இமாமவர்களுக்கு வேறிடங்களுக்குச் சென்று கற்க வேண்டிய தேவை இருக்கவில்லை. எனினும், மக்கா, மதீனா நகரங்களுக்குச் சென்று ஹதீஸ்களைக் கற்றும், மனனம் செய்தும் மீண்டார்கள். அவரது ஹதீஸ் தொகுப்பு நூல் முஸ்னத் அஹ்மத் எனப்படுகின்றது.

இமாமவர்கள் அக்காலத்தில் மார்க்கத் தீர்ப்பு வழங்கிய அறிஞர்களுள் முக்கியமானவராவார். ஹதீஸ் துறையிலும், பிக்ஹுத் துறையிலும் கவனம் செலுத்திய அவர்கள், பிக்ஹுத் துறையின் சமகால தேவையைப் பூர்த்தி செய்தார். இவரது காலத்தில் பக்தாத் அறிவியல் துறையின் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. அதே நேரத்தில் பிற கலாசாரத் தாக்கங்களாலும் பாதிக்கப்பட்டிருந்தது. இஸ்லாத்துக்கு முரண்பட்ட கருத்துக்களை கலீபாக்களும் அங்கீகரிக்கும் நிலை இருந்தது. இவ்வேளை இமாமவர்கள் சத்தியத்துக்காகப் போராடினார்கள். சிறைவாசமும், கசையடியுமாக அவருக்கு அரசு தண்டனை வழங்கியது.

பொதுவாக எல்லா இமாம்களும் விவேகமும், அறிவு நுட்பமுமுடையவர்களாகக் காணப்பட்டார்கள். ஈமானிய உறுதியும். தக்வாவும், நற்குண நல்லொழுக்கங்களும், சத்தியத்துக்காகப் போராடும் பண்பும் அவர்களிடம் நிறைந்திருந்தன. தமது அறிவையும் செல்வத்தையும் அவர்கள் இஸ்லாத்துக்காகவும், முஸ்லிம்களின் நலனுக்காகவும் அர்ப்பணித்தார்கள். இதனால்தான் அவர்களின் வாழ்வும், பணியும் இன்றும் கூட நினைவூட்டப்படுகின்றன.

**பயிற்சி:**

1. பிக்ஹுத்துறை அறிஞர்கள் எனப்படுவோர் யாவர்?
2. ‘‘மத்ஹப்’’ எனப்படுவது யாது?
3. இமாம்களின் பணி மூலம் நாம் பெறுகின்ற பயன்களைப் பட்டியல் படுத்துக.
4. பிக்ஹுத் துறையின் அவசியம் பற்றி சிறு கட்டுரையொன்று வரைக.